இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்

முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப் பட்டம்
கணக்கியல் மற்றும் நிதியியல்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
மனிதவள முகாமைத்துவம்

HRU4506- மனிதவள முகாமைத்துவம்
இறுதிப் பரீட்சை – 2024/2025
காலம் - மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 04.01.2026 **நேரம்: 01.30 பி.ப - 04.30 பி.ப**

அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் ஆறு (06) வினாக்களை கொண்டுள்ளது. ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைத்தாள் புத்தகத்தில் (Answer booklet) விடையளிக்கவும்.
- தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

வினா 01

a. மனிதவள முகாமைத்துவத்தை வரையறுத்து, மாற்றமடைந்து வரும் இன்றைய வணிக சூழலில் மனிதவள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை பொருத்தமான உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

b. "வேலை வடிவமைப்பானது (Job design) ஊழியர்களின் வகிபங்குகளை நிறுவன இலக்குகளுடன் ஒருங்கிணைப்பதில் (Aligning) முக்கிய பங்காற்றுகின்றது". வேலை விபரம் (Job description) மற்றும் வேலை விபரணம் (Job specification) என்ற கோட்பாடுகளை விளக்குவதோடு வேலை வடிவமைப்பு தொழிற்பாட்டில் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குக.

(10 புள்ளிகள்)
(மொத்தம்: 20 புள்ளிகள்)

வினா 02

a. "ஆட்சேர்ப்பு (Recruitment) மற்றும் தெரிவு செய்தலானது (Selection) எந்தவொரு நிறுவனத்திலும் காணப்படும் இரண்டு முக்கிய மனிதவள முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஆகும்".

I. "ஆட்சேர்ப்பு" மற்றும் "தெரிவு செய்தல்" என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(04 புள்ளிகள்)

II. மூன்று (03) ஆட்சேர்ப்பு முறைகளையும் மூன்று (03) தெரிவு செய்தல் முறைகளையும் பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

b. "பயிற்சி என்பது ஊழியர்கள் விளைதிறனான முறையில் செயற்படத் தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்கின்ற ஒரு முறையான செயன்முறையாகும்".

பயிற்சி செயன்முறையில் (Process of training) உள்ள படிமுறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)
(மொத்தம்: 20 புள்ளிகள்)

வினா 03

"பணியாளர் ஈடுபாடானது (Employee engagement) நிறுவன வெற்றிக்கு ஒரு முக்கிய காரணியாக பரவலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும், பல நிறுவனங்கள் அதீத ஊழியர் ஈடுபாட்டை நீண்டகாலம் பராமரிப்பது தொடர்பில் சிரமங்களுக்கு இன்னும் முகம் கொடுக்கின்றன".

a. "பணியாளர் ஈடுபாடு" என்பதையும் பணியாளர் ஈடுபாட்டின் ஊழியர்கள் மற்றும் நிறுவனத்துக்கான விளைவுகளையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

b. தற்கால நிறுவனங்களில் ஊழியர் ஈடுபாட்டை விருத்தி செய்வதில் உள்ள சவால்களையும் மற்றும் பயன்படுத்தக் கூடிய தந்திரோபாயங்களையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

வினா 04

a. "மனிதவள முகாமைத்துவமானது நிறுவனத்தின் அக சூழல் மற்றும் புற வணிக நிலைமைகள் இரண்டாலும் தாக்கம் செலுத்தப்படுகின்றது".
சமகால நிறுவனங்களில் முகாமைத்துவ செயற்பாடுகளை அக மற்றும் புற காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை ஆராயுங்கள்.

(10 புள்ளிகள்)

b. "நவீன வேலைத்தளம் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடைந்து வருவதோடு, மனிதவள முகாமைத்துவத்துக்கு புதிய சவால்களை முன்வைக்கிறது".
நவீன நிறுவனங்களில் மனிதவள முகாமைத்துவம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகளைப் பற்றியும், மனிதவள நிபுணர்கள் (HR professionals) இந்த சவால்களை எவ்வாறு விளைதிறனாக எதிர்கொள்ள முடியும் என்பதையும் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

வினா 05

a. "மனிதவளத் திட்டமிடல் ஒரு நிறுவனத்திற்கு சரியான நபர்கள், சரியான இடத்தில், சரியான நேரத்தில் இருப்பதை உறுதி செய்கிறது". இக் கூற்றை நியாயப்படுத்துங்கள்.

(10 புள்ளிகள்)

b. "மனிதவள முகாமைத்துவ கோட்பாடுகள், நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை எவ்வாறு விளைதிறனாக நிர்வகிக்கின்றன மற்றும் ஊக்குவிக்கின்றன என்பதை விளக்க உதவுகின்றன". மனித மூலதனக் கோட்பாடு (Human Capital Theory) மற்றும் முகமைக் கோட்பாட்டை (Agency Theory) விளக்கி, சமகால நிறுவனங்களில் மனிதவள முகாமைத்துவ நடைமுறைகளுக்கு அவற்றின் பொருத்தத்தை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

வினா 06

a. "நிறுவனங்களில் ஊழியர் பிரதிநிதித்துவம் (Employee representation) மற்றும் பேரம் பேசல் (Negotiation) ஆகியவை தொழில்துறை உறவுகளின் (Industrial relations) முக்கிய அம்சங்களாகும்".
"தொழிற்சங்கம்"(Trade union) மற்றும் "கூட்டு பேரம் பேசல்" (Collective bargaining) என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

b. "நிறுவனங்களில் மோதல்களைத் தீர்ப்பதற்கும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒப்பந்தங்களை அடைவதற்கும் விளைதிறனான பேரம் பேசல் அவசியமாகும்".
விளைதிறனான பேரம் பேசல் செயன்முறையை விளக்குங்கள்.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

-பதிப்புரிமையுடையது-